ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2112/42 - 2019 පෙබරවාරි මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.02.28

*2112/42 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க*, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் *92* ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கண்டி வடக்கு - பாத்ததும்பர ஒன்றிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின், பயிற்சி நிலையம் தங்குமிட விடுதி மற்றும் சுற்றுலா பங்கலாவை நிர்மாணிப்பதற்காக காணித்துண்டொன்றை தேவைப்படுவதால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளின் அசையாச் சொத்துரிமையை பெற்றுக் கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,<br>
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர்.

நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு,<br>
இல. *35*, 'லக்திய மெகர', புதிய பாராளுமன்ற வீதி,பெலவத்த,<br>
பத்தரமுல்லை.<br>
*2019*, பெப்புருவரி *15*.<br>
*5/2/1/1425*.

## அட்டவணை

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில், பூஜாபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 525, கோவிலமுதுன கிராம அலுவலர் பிரிவில், கல்ஹின்ன கிராமத்தில் அமைந்துள்ள அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே. ஓ. பெரேராவினால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1918ஐக் கொண்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர் வரைபடத்தின் காணித் துண்டு 'சீ' எனக் குறிப்பிடப்பட்டுள்ள "கெப்பெட்டிகல வத்த" எனும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து சுமார் 03 ஏக்கர் விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு :

காணித்துண்டு : துண்டு சீ;
காணியின் பெயர் : கெப்பெட்டிகல வத்த;
எல்லைகள் :

வடக்கு : ஜே. இசாடீன் உரிமை கோரும் காணி ;
கிழக்கு : மாகாண வீதி (வீ.அ.அ.) மற்றும் பசில் உரிமை கோரும் காணி ;
தெற்கு : அசாம் மற்றும் பசில் உரிமை கோரும் காணிகள் ;
மேற்கு : அசாம் உரிமை கோரும் காணி.

உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : அப்துல் சமாத்,
இல. 114/1, ஹில் ஸ்டீட்,
தெஹிவளை.

03 -768

---

## திருத்தம்

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2044/11 ஆம் இலக்க 2017.11.06 ஆந் திகதியி அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் இலக்கம் 1A பக்கத்தில் இலக்கம் 11-941 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் அட்டவணையில் கிராம அலுவலர் பிரிவு, அலவத்துகொட என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் அது கிராம அலுவலர் பிரிவு, இல. 585-பலகடுவ எனத் திருத்தியமைக்கப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு,
இல. 35, 'லக்திய மெதுர', புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த,
பத்தரமுல்லை.
2019, பெப்புருவரி 15.
5/2/1/1316.

03-769

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.